அடையாள இலக்கம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2015

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## மத்திய பிரிவு

(8 – 9 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணி 30 நிமிடம்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) கோடிட்ட இடங்களைப் பொருத்தமான ஒரு எழுத்தைக் கொண்டு நிரப்புக.** (10 புள்ளிகள்)

1. திருக்கு_______ள்
2. வா_______வில்
3. ப_______சை நிறம்
4. தைப்பொ_______கல்
5. ஒட்_______கம்
6. த_______ணீர்
7. பூம _______ம்
8. சனிக்_______ழமை
9. கால்விர_______கள்
10. உடல் உ_______ப்புக்கள்

| புள்ளிகள் | |
|---|---|

**(ஆ) கீழே தரப்பட்ட சொற்களுக்குப் பன்மைச் சொற்களை எழுதுக.**

(10 புள்ளிகள்)

1. படம் - ________________________
2. கால் - ________________________
3. நாள் - ________________________
4. சொல் - ________________________
5. அவன் - ________________________

| புள்ளிகள் | |
|---|---|

**(இ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.** (10 புள்ளிகள்)

1. கமலா ______________________ கடைக்குச் சென்றாள்.

   அ) அப்பாவுடன் ஆ) அப்பாவுக்கு

   இ) அப்பாவை ஈ) அப்பாவிடமிருந்து

2. ______________________ பழுத்த பழங்களுக்குச் சுவை அதிகம்.

   அ) மரத்தின் ஆ) மரத்திற்கு

   இ) மரத்தை ஈ) மரத்திலே

3. முருகன் தமிழ்ப் ______________________ கெட்டிக்காரனாக இருக்கிறான்.

   அ) பாடத்தை ஆ) பாடத்திலே

   இ) பாடத்துக்கு ஈ) பாடம்

4. பரீட்சையிற் சிறப்பாகச் செய்திருந்த ______________________ ஆசிரியர்கள் பாராட்டினார்கள்.

   அ) மாணவர்களுக்கு ஆ) மாணவர்களின்

   இ) மாணவர்களை ஈ) மாணவர்களுடைய

5. "_____________________ நீங்கள் பெரியவர்களின் சொல்லைக் கேட்டு நடக்க வேண்டும்" என்று தலைமை ஆசிரியர் அறிவுரை கூறினார்.

   அ) பிள்ளைகளா ஆ) பிள்ளைகளின்

   இ) பிள்ளைகளே! ஈ) பிள்ளைகளை



| புள்ளிகள் | |
|---|---|

**(ஈ) வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன்கீழே கோடிடுக.**
(10 புள்ளிகள்)

1. சுமதி பலநாட்டு **நாணயங்களைச்** சேர்த்து வைத்திருக்கிறாள்.

   அ) காசுகளை ஆ) பொருள்களை இ) கொடிகளை ஈ) முத்திரைகளை

2. ஒருவர் மேடையிலே பேசும்பொழுது பேச்சிலே **தெளிவு** இருக்கவேண்டும்.

   அ) சத்தம் ஆ) வீரம் இ) விளக்கம் ஈ) அமைதி

3. நம் நாட்டில் அதிகமான பொருள்கள் **மலிவான** விலையிற் கிடைக்கின்றன.

   அ) நல்ல ஆ) குறைந்த இ) நிறைந்த ஈ) விரும்பிய

4. கொடிய மிருகங்கள் **காட்டில்** வசிக்கின்றன.

   அ) வனத்தில் ஆ) குகையில் இ) புற்றில் ஈ) புதரில்

5. கேள்விக்குப் பதில் தெரிந்த மாணவர்கள் **கரங்களை** உயர்த்தினர்.

   அ) தலைகளை ஆ) கைகளை இ) விரல்களை ஈ) கால்களை

| புள்ளிகள் | |
|---|---|

**(உ) கீழேயுள்ள வாக்கியங்களிற் கோடிடப்பட்ட வினைச்சொல் ஒவ்வொன்றின் காலத்தை அதன் அடியில் உள்ள வாக்கியத்திற்கு ஏற்றபடி மாற்றித் தரப்பட்ட இடைவெளிகளை நிரப்புக.**

(20 புள்ளிகள்)

1. நான் நேற்றுப் படம் **வரைந்தேன்.**

   தம்பி இப்பொழுது படம் ___________________________.

2. கபிலன் நேற்று ஆசிரியரைச் **சந்தித்தான்.**

   சாந்தி நாளை சிநேகிதியைச் ___________________________.

3. பறவை இனங்கள் ஒன்றுகூடிக் கூட்டம் கூட்டமாக **வாழ்கின்றன.**

   முற்காலத்தில் மனிதர்களும் ஒன்றுகூடிக் கூட்டம் கூட்டமாய்

   ________________________________.

4. நேற்று எனது நண்பர்கள் கடற்கரைக்கு **நீந்தச்** சென்றார்கள்.

   நாளை நானும் கடற்கரைக்குச் சென்று ____________________.

5. நாள்தோறும் கமலா மாலதியுடன் **விளையாடுவாள்.**

நேற்று அவள் மாலதியுடன் ________________________________.

| புள்ளிகள் | |
|---|---|

**(ஊ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்துத் தரப்பட்ட சிறுகதையிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.**

(20 புள்ளிகள்)

முன்னொருகாலத்தில் ஒரு விவசாயியிடம் ஒரு நூதனமான வாத்து இருந்தது. அந்த ________________________ தினமும் ஒரு தங்கமுட்டையிடும். ________________________ அந்த முட்டையை நல்ல விலைக்கு விற்று வந்தான். காலப்போக்கில் விவசாயி ________________________ ஆகிவிட்டான். பெரிய ________________________ கட்டினான். அவன் மனைவி மக்களுடன் அதில் வசித்து வந்தான். நன்றாக உண்டு, நல்லாடை ____________________ மகிழ்ச்சியுடன் அவர்கள் வாழ்ந்தனர்.

இவ்வாறு நெடுங்காலம் சென்றது. ஒரு நாள் திடீரென்று ஒரு கெட்ட ______________________ அவன் மனதிலே தோன்றியது. வாத்தின் உடம்பிலிருந்து எல்லா _______________________ ஒரேசமயத்தில் எடுத்தால் தான் உடனடியாகப் பெரும் பணக்காரன் ஆகலாமே என்று மனக்கோட்டை கட்டினான். அடுத்த நாள் காலையில், அவன் தன்னுடைய பெரிய _______________________ வாத்தைக் கொன்று, அதன் உடலைக் கிழித்துப் பார்த்த பொழுது அதனுள் ஒரு முட்டைகூட _______________________ என்பதைத் தெரிந்து கொண்டான். வாத்து ____________________ தங்க முட்டை தனக்கு இனிமேல் ஒருநாளும் கிடைக்காது என்பதை அறிந்து மனம் மிக வருந்தினான். அவனின் பேராசை பெருநட்டத்திலே முடிந்தது.

| | | |
|---|---|---|
| வாத்து | வீடு | எண்ணம் |
| பணக்காரன் | உடுத்து | இருக்கவில்லை |
| முட்டைகளையும் | கத்தியால் | விவசாயி |
| இறந்ததால் | | |

| | |
|---|---|
| புள்ளிகள் | |

**(எ) கீழேயுள்ள படத்தைக் கவனமாகப் பார்க்கவும். கீழே தரப்பட்ட 5 சொற்களைப் பாவித்துப் படங்களுக்குப் பொருத்தமான வசனங்களை எழுதுக.**

(20 புள்ளிகள்)



1. மரம்: ______________________________________________

______________________________________________

2. சிறுவர்கள்: ______________________________________________

______________________________________________

3. உடற்பயிற்சி :______________________________________________

________________________________________________________________

4. பேசுகிறார்கள்: ____________________________________________

________________________________________________________________

5. பூக்கள்: _________________________________________________

________________________________________________________________

| புள்ளிகள் | |
|---|---|